இது குறித்து அமைச்சரவர்களிடம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆகவே உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு இதனைப் பரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அரசு அது பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. ர. ஜெபமணி: தலைவரவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. இப்போது இந்தக் கட்டிடம் இடிந்து ஒருவர் கீழே விழுந்திருக்கின்றார். அந்த நிகழ்ச்சி நம் பக்கத்திலேயே நடைபெற்றிருக்கிறது. ஆகவே ஒருவேளை நாம் இருக்கும் இந்தக் கட்டிடத்திற்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது. ஆகவே உடனடியாக அதைக் கவனிப்பதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை கவனித்து உடனடியாக அவைக்கு நான் தகவல் தெரிவிக்கிறேன்.

பல்லகச்சேரி ஏரிப்பாசனப் பகுதி

***வினா எண் 870—திரு. செஞ்சி இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டப் பட்டுள்ள சூளாங்குறிச்சி அணையினால் பல்லகச்சேரி கிராமத்திலுள்ள ஏரிப் பாசனப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாற்றுத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள்

***வினா எண் 871—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் தனது சேல்ஸ் எம்போரியங்களை எந்தெந்த மாவட்டங்களில் நடத்திவருகிறது?

(ஆ) அதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்த உத்தேசம் உள்ளதா?